முற்பகல் 10-10

(உ) திரு. 'நெல்' ஜெயராமன் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாப்பதில் அரும்பணியாற்றிய திரு. 'நெல்' ஜெயராமன் அவர்கள் 6-12-2018 அன்று உடல் நலக் குறைவினால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மறைந்த திரு. 'நெல்' ஜெயராமன் அவர்கள் "நமது நெல்லைக் காப்போம்" என்ற இயக்கத்தின்மூலம் அரிய பாரம்பரிய 174 நெல் ரகங்களை மீட்டெடுத்து, அதனை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தியதோடு தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் உற்பத்தியினை உயர்த்திய பெருமைக்குரியவர் ஆவார். அவரது இந்த மகத்தான சேவையினை அங்கீகரித்து பாராட்டும் விதமாக, 14-11-2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி கௌரவித்தார்கள்.

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், வேளாண் பெருங்குடி மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஊ) மருத்துவர் எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: '5 ரூபாய் டாக்டர்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட டாக்டர் எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் 19-12-2018 அன்று உடல் நலக் குறைவால் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்கள் தன்னுடைய சிறு வயது முதலே, 'மருத்துவம் படிக்க வேண்டும், மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்' என்ற உயரிய நோக்கத்துடன் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக ஏழை எளிய மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மிகச் சிறந்த வகையில் மருத்துவ சேவையை வழங்கியுள்ளார்.

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.